செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

# இந்து சாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 10.

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

[புத்-எகூ] யாழ்ப்பாணம்:- பிலவங்க ஞு கார்த்திகை மீ அ உ வெள்ளிக்கிழமை (24-11-1967) [இல-நட]

JAFFNA COLLEGE
UNDERGRADUATE LIBRARY
NOV 28 '67

தேவர்கள் ...ஞ்சம்

## திருவாதிரை விரதநிர்ணயம்

மார்கழி மாதத்தில் திருவாதிரை நட்சத்திரத்திற்குப் பத்துத் தினங்களுக்கு முன் சஷ்டித் திதியிலாவது சதய நட்சத்திரத்திலாவது விநாயகரைப் பூசித்து விரதமனுட்டிக்கவும் திருவாதிரைக்கு முன் பத்தாவது தினத்தில் சதயம் வந்தாலும் சரி வராவிட்டாலும் சரி திருவாதிரைக்கு முன் பத்தாவது நாளில் திருவாதிரை விரதத்தை ஆரம்பிக்க வென்று யோகசாகமமும்;

மார்கழி மாதத்தில் சதயம் சேர்ந்த சட்டியில் அல்லது சஷ்டி சேரா திருப்பினும விநாயகரைப் பூசித்து திருவாதிரை விரதததைத் தொடங்குக என்று சூக்குமாகமமும்;

மார்கழிமாத சுக்கில பட்ச சட்டியும சதயமும் சேர்ந்த தினத்தில் மோதகம், நெல் மலர், அன்னவகை முதலிய நிவேதனப் பொருட்களைப் படைத்து நிவேதித்துப் பூசிக்க எனவும், சட்டி கூடினும் சேராதிருந்தாலும நட்சத்திரம் பிரதானம்ஆகையால் சதயம் முதல் திருவாதிரை அந்தமாக விரதமனுட்டிக்கத் தக்கது எனவும், விநாயகரைப் பூசித்துத் திருவாதிரை விரதத்துக்குக் காப்புக் கட்டுதல் வேண்டும் எனவும் காரணாகமமும் செப்புகின்றன.

தேவர்களுக்குஉத்தராயண புண்ணிய காலம் உதயம்: சித்திரை விஷு புண்ணிய காலம் மத்தியானம், தெட்சிணாயன புண்ணிய காலம் அஸ்தமயனம், ஐப்பசி விஷு புண்ணிய காலம அர்த்த யாமம். அர்த்த யாமத்தின் பின் திருக்கார்த்திகையில் விளக்கேற்றி விநாயக விரதத்தை ஆரம்பித்து உஷக் காலமாகிய மார்கழியில் வரும சஷ்டியில் அல்லது சதயததில் விநாயகரைப் பூசித்து திருவாதிரை விரதத்தை ஆரம்பித்தலே முறையாகும்.

எனவே, கார்த்திகை விளக்கீடு, விநாயக விரதம், திருவாதிரை விரதம் ஆகிய விரதங்கள் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை என்பது புலனாகின்றது.

விநாயகசட்டி விரதம் சாந்திர மாத விரதம் மார்க்கசீர்ஷ சுத்தத்திலே வருவது.

ஒருமாதத்திலே இருமுறை நட்சத்திரம் வந்தால் பிந்தியதில் செய்ய வேண்டுமெனின் அது சங்கிராந்தி சமபந்தமாய் இருப்பின் முந்தியதால் செய்க என்று ஆகமங்கள் செப்புகின்றன.

ஆகையால் இவ் வருடம் மார்கழி மாதம் 3-ம் திகதி திங்கட்கிழமையன்று ஆருத்திராதரிசனம் கொள்ளுதல் ஆகம சம்மதமானது.

இங்ஙனம்,
ச. குமாரசுவாமிக்குருக்கள்
அச்சுவேலி, 20-11-67.



### நாவலர் நல்வாக்கு

அறிவும் நல்லொழுக்கமும் உடையவர்களை நிந்திப்பவர்கள், அறிவையும் நல்லொழுக்கத்தையுமே நிந்திக்கிறார்கள்.

ஞான வொழுக்கம் வறந்ததுட் டக்கலி நாவில்வந்து
ஞான வொழுக்கப் பிரசங்க மாமழை ஞாலமெல்லாங்
கான மெனப்பொழிந் தார்த்தா யருட்புட் கலாவர்த்தமே!
கோன மதாறு முகநா வல! சற்குருமணியே.

— சற்குருமணிமாலை.

## சிவம் மணக்கும்

— "அளவையூர் — சஞ்சீவி"

இராகம்: தோடி :: தாளம்: ஆதி

பல்லவி

நல்லை ஆறுமுக நாவலர் நாமத்தைச்
சொல்ல சிவம் மணக்கும் — தமிழ் மணக்கும் (ந)

அநுபல்லவி

தொல்லைப் பிறசமயத் துன்பம் துடைத்தவர்
நல்ல பிரசங்கத்தின் ஞானம் படைத்தவர் (ந)

சரணம்

ஓதும்மந் திரம், நீறு உருத்திர மாமணி,
ஆதிசி வாகமம், ஆலயத் திருப்பணி,
வேத வரம்புகளை விளக்கிட வந்தார்
சாதனை நூல்களின் சஞ்சீவி தந்தார். (ந)

## நாவலர்

பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

II

பிரிவு:

பாதிரியாரைப் பண்டிதரின் பிரிவு வருத்தியது. சிறிதுகாலத்தின் பின் பாதிரியார் சென்னைக்குச் சென்று ஒரு கல்லூரியில் தமிழ்ப் பண்டிதரா யிருந்து கொண்டு 'தினவர்த்தமானி' என்ற பத்திரிகையையும் நடத்தினர். பார்சிவல் பெரியபுராணத்திற் சொல்லப்பட்ட சாக்கியநாயனர்போலக் காலங்கழித்தார் என்பது, யாழ்ப்பாணச் சமயநிலை என்ற புத்தகத்தால் ஊகிக்கத் தக்கது. நாவலர் பிரபந்தம் 77-ம் பக்கம் பார்க்க.

சுற்றத் துறவு:

பண்டித உத்தியோகத்தைத் துறந்தது பண்டிதரின் தமையன்மாருக்கு வெறுப்பை உண்டாக்கியது. 'நீ என்ன புத்தியீனஞ் செய்துகொண்டாய்; இந்தச் சம்பளம் இனி நீ எங்கே பெறுவாய்; இனிமேல் உனக்கு உலகத்திலே என்ன மதிப்பு' என்று அவரைக் கண்டித்தார்கள். அவர் 'நான் உங்களிடம் வந்து பொருளுதவி செய்யும்படி கேளாதிருக்கக் கண்டுகொள்ளுங்கள்' என்று சொல்லி அவர்களைவிட் டகன்றார்.

பெரிய சுமைகள்:

கையிற் பணம் இல்லை. வித்தியாசாலைக்கென்று நிலமில்லை. சொந்தமான கட்டடமில்லை. வீடொன்றில் வித்தியாசாலை நடக்கின்றது. அவரிடம் படித்தவர்களே உபாத்தியாயர்கள்; வேதனமின்றிப் படிப்பிக்கின்றார்கள். பிள்ளைகளிடம் வேதனம் பெறுவதில்லை. ஏட்டு முறையை மாற்றி ஆங்கிலப் பாடசாலையிற்போலப் புத்தக முறையைக் கையாளுவது விருப்பம். வசன நடையிற் பாலபாடங்கள் இல்லை. பிள்ளைகளின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் புத்தகம் எழுதவேண்டும். கிறிஸ்தவர்கள் "குருட்டுவழி" முதலிய துண்டுப் புத்தகங்கள் மூலம் சைவ தூஷணஞ் செய்கின்றார்கள். அதனைப் பரிகரித்துத் துண்டுப் புத்தகங்கள் வெளியிட வேண்டும். அச்சுக்கூடம் சைவர்களிடம் இல்லை. கிறிஸ்த அச்சுக்கூடத்தில் சைவ சம்பந்தமான புத்தகங்களை அச்சிட்டுக் கொடார்கள். இந்தப் பண்டிதரின் புத்தகமானல் தொடவும் மாட்டார்கள்.

அச்சுக்கூடம்:

பண்டிதருக்கு அச்சுக்கூடமொன்று தேவையாயிருந்தது. அடுதத சௌமிய வருடம் (1849) ஆடி மாதம் அச்சுக்கூடம் ஒன்று வாங்கப் பண்டிதர் சென்னபட்டணஞ் சென்றார். சென்றவர், தமிழுக்குஞ் சைவத்துக்கும ஒரேயொரு கொழுகொம்பாய் விளங்குந் திருவாவடுதுறை ஆதீனத்துக்குஞ் சென்றார்.

ஆறுமுக நாவலர்:

அங்கே இரண்டாவது சந்நிதானமா யிருந்தவர் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர். அவர் கலாவிநோதர்; ஒழுக்கசீலர்; சித்தியாருக்கு உரை செய்த அறுவருள் ஒருவர். அவர் பண்டிதரோடு சல்லாபஞ் செய்து, அவரது ஆற்றலை அறிந்து, தலைமைச் சந்நிதானத்தின் தலைமையில் ஒரு வித்துவசபை கூட்டிப் பண்டிதரைப் பிரசங்கஞ் செய்யும்படி பணித்தார். பண்டிதர் கடல் மடை திறந்ததுபோலச் சைவ சித்தாந்தப் பொருளிற் செந்தமிழ் மழை பொழிந்தார். உபய சந்நிதானங்களும் பேராச்சரியமுற்று "நாவலர்" என்ற பட்டத்தை வழங்கின. ஸ்ரீராமன் ஜனகனின் வேள்வி யொன்றைக் காணச் சென்றவன், வில்லை வளைத்துச் சீதையுடன் மீண்டவாறுபோல, அச்சுக்கூடம் வாங்கச் சென்ற பண்டிதர், ஆறுமுகநாவலராய்த் திரும்பினார். யாழ்ப்

தொடர்ச்சி 2-ஆம் பக்கம்

# இந்து சாதனம்

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

பிலவங்க ஞூ கார்த்திகை மீ அ-உ வெள்ளிக்கிழமை [1967]

## நாவலர் நூல்கள்

27-10-67 ல் வெளிவந்த இந்துசாதனப் பிரசுரத்தில் "பிறர் உனக்குச் செய்த குற்றங்களினாலே உனக்குக் கோபம் தோன்றும்பொழுது நீ பிறருக்குச் செய்த குற்றங்களை நினைப்பாயாகில், அது நீங்கிவிடும்" என்ற வாக்கியம் "நாவலர் நல்வாக்கு" என்ற தலைப்பின் கீழ் வெளிவந்தது. அதனைப் படித்த ஓர் அன்பர் இவ் வாக்கியம் நாவலருடைய எந்த நூலில் காணப்படுகின்றதென அறிவதற்கு எம்மிடம் வந்தார் நாவலரால் எழுதப்பெற்ற இரண்டாம் பாலபாடத்தில் முதல் பிரிவிலுள்ள நீதி வாக்கியங்களுள் இதுவொன்றாகுமென்பதனை அறிந்து கொண்டு யாழ்ப்பாணத்திலுள்ள புத்தகக் கடைகள் ஒவ்வொன்றிலும் அப் புத்தகத்தை விலைக்குப் பெற முயன்றனர் அவருடைய முயற்சி பலனளிக்கவில்லை. இந்த விதமாக நாவலர் எழுதிய நூல்கள் அருகி வருகின்றன நாவலர் தாபித்த சென்னை வித்தியாநுபாலன யந்திரசாலையில் இக் காலம் அவருடைய நூல்கள் கிரமமாக அச்சிடப்படுவதில்லை நாவலருடைய புத்தகங்கள் இப்பொழுது விற்பனை குறைந்தமையினால் சென்னையிலுள்ள நாவலர் அச்சியந்திரசாலை அதிபர் அவற்றை அச்சிடுவதில்லையென்ற ஒரு சாட்டை அவர் கூறலாம், ஆனால் புத்தகங்களைப் பெற விரும்புபவர்களுக்குக் கிடைக்கக் கூடிய வகையில் ஷை அச்சியந்திரசாலை அதிபர் நாவலருடைய நூல்களைப் பிரசுரஞ் செய்தல் வேண்டும்.

நாவலருடைய உயர்ந்த கருத்துக்கள், தவம், தியாகம், சிவபக்தி, வைராக்கியம், வீரம் முதலியவற்றை நம்மவர்கள் அறிந்து அவருடைய வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதற்கு நாம் அவருடைய நூல்களைக் கற்க வேண்டும். நாவலருடைய நூல்கள் சிறுவர் தொடக்கம் முதியவர்களுக்கும் நன்மை பயக்கும். இக் காலம் வெளிவரும் பொருளற்ற சில நூல்களைப் போன்றனவல்ல நாவலருடைய நூல்கள். அவை கற்கின்றவர்களுக்கு அறம், பொருள், இன்பம் வீடு ஆகிய புருடார்த்தங்களையும் நன்கு விளக்குந்தகையன. அத்தகைய நாவலருடைய நூல்கள் வித்தியாசாலைகளிற் கற்பிக்கக்கூடிய சந்தர்ப்பமில்லாமை வருந்தக்கூடிய நிலையாகும். அரசாங்கம் வித்தியாசாலைகளைத் தேசிய மயமாக்கியமையும் பள்ளிக்கூடப் புத்தகங்களைப் பிரசுரஞ் செய்யும் உரிமையையும் ஏற்றுக் கொண்டமையும் நாவலர் நூல்கள் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்படுவதற்குத் தடையாயிருக்கின்றன. நாவலருடைய நான்காம் பாலபாடம் ஒரு தேன்வதை போன்றது. தேனீ பல புஷ்பங்களிலுள்ள தேனையும் பெற்று வதையில் சேகரிப்பதுபோல நாவலர் அவர்கள் நான்காம் பாலபாடத்தில் வேத ஆகமங்கள் நீதி நூல்கள் புராணேதிகாசங்கள் முதலிய நூல்களின் கருத்துக்களைத் திரட்டித் தந்திருக்கின்றனர் சைவ சமய உண்மைகள், பொருளாதாரம், ஆரோக்கியம், நல்லொழுக்கம், தேவாலயங்கள் மடாலயங்கள் முதலியவற்றைப்பற்றிச் சிறந்த கருத்துக்கள் அந் நூலில் காணப்படுகின்றன. நாவலர் எழுதிய பெரிய புராண சூசனம், வேதாகமங்கள், சைவ சித்தாந்த சாத்திரம், புராணங்கள் ஆகியவற்றின் சாரத்தை ஆதாரமாகக் கொண்டது. அதனைப் படிப்பவர்கள் 'மெய்ஞ்ஞானத்தை இலகுவில் உணர்வார்கள். இவ்விதமான சிறந்த ஞான பொக்கிஷமாகவுள்ள நாவலருடைய நூல்களை நமது மக்கள் கற்க வேண்டும். அவற்றைத் தனிப்பட்ட முறையில் சைவத்தாபனங்கள் பிள்ளைகளுக்கு வகுப்பு வைத்துக் கற்பிக்க ஏற்பாடு செய்தல் பெரும் நன்மை பயக்கும். நாவலருடைய நூல்களை முன் சொல்லப்பட்ட சென்னை வித்தியாநுபாலன அச்சியந்திரசாலை அதிபர் பிரசுரஞ் செய்தலில் ஊக்கமெடுக்காவிட்டால் யாழ்ப்பாணத்திலுள்ள சைவ மக்கள் அவருடைய நூல்களை அச்சிட்டு விற்பனை செய்யக் கூடிய முயற்சியைக் கையாளுதல் வேண்டும். நாவலர் பெருமானுக்கு நாங்கள் செய்யக் கூடிய சிறந்த கைம்மாறு மதுவேயாகும்.

நேயர்கள் நெஞ்சம்

## திருவாதிரைத்திருநாள் தின நிர்ணயம்

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

10-11-1967 இல் வெளியான இந்து சாதனத்தில் "திருவாதிரைத் திருநாள் எப்போது?" எனத் துணைவி நண்பர் பிரபஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் கேட்ட வினாவுக்குப் பின்வருமாறு விடை தரப்படுகிறது.

ஐந்தொழிற் பொருளாக அநவரத தாண்டவஞ் செய்தருளும் நடராஜ மூர்த்திக்கு ஆண்டுதோறும் ஆறு அபிஷேகங்கள் செய்யப்படவேண்டும் அவற்றுள் மூன்று திதியை அடிப்படையாகக் கொண்டவை. மற்றைய மூன்று நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்டவை எனக் காமிகம் காரணம் என்னும் இரு ஆகமங்களும கூறுகின்றன.

ஆவணி, புரட்டாதி, மாசி ஆகிய மூன்று மாசமும் பூர்வ பக்கச் சதுர்த்தசியிலே நடராஜ அபிஷேகம செய்யப்பட வேண்டியது. சித்திரை மாசம் திருவோணத்திலும, ஆனிமாசம் உத்தரத்திலும், மார்கழி மாசம் திருவாதிரையிலும் நடராஜ அபிஷேகம் செய்யப்படவேண்டும். ஆகவே, மார்கழி மாச அபிஷேகம நட்சத்திர முதன்மையுடையது என்பது தெளிவாகும்.

ஒரு மாசத்தில் இரு நட்சத்திரங்கள் வரநேர்ந்தால் பிந்தியதையே கொள்ள வேண்டுமெனக் காரணம், காமிகம ஆகிய இரு ஆகமங்களும் கூறுகின்றது. அது: "ஏக மாஸே தரி நட்சத்ரே (சா) அந்த்ய ரிட்சே (சா) அபிஷேசயேத்" என்பது.

இனி மிருகசீரிடமும், திருவாதிரையும், சதுர்த்தசியும் ஒரே நாளில் அமைந்தால், அன்று அபிஷேகம பூஜை முதலியன செய்யலாகாது. அப்படிச் செய்தால் நாடு நோயினால் பீடிக்கப்படும். ஆகவே, நடராஜப் பெருமானுக்கு உரிய திருவாதிரை அபிஷேக தரிசனங்களை அடுத்த நாளே கைக்கொள்ள வேண்டும் என உத்தரகாரணாகமம் கூறுகிறது அது வருமாறு:

"ஆர்த்ராச ம்ருக சீர்ஷாச
சதுர்த்தஸ்யாச தத்ரே
வ்யாதிநா பீடிதம் ராஜ்யம்
தஸ்மாத் பூஜாம்பரே உற்சி"

என்பது.

இப்பிலவங்க வருடம் மார்கழி மாசம 29 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 9 மணிக்குச் சதுர்த்தசி கூடுகிறது. அன்று இரவு 12 மணிவரையும் மிருகசீரிட நட்சத்திரம் இருக்கிறது. அதன் பின் இரவு முழுவதும திருவாதிரை இருக்கிறது ஆகவே, முன்காட்டியபடி மார்கழி 29 உ சனிக்கிழமை இரவு அபிஷேகமோ, தரிசனமோ செய்யலாகாது. ஆகவே, அடுத்த நாளாகிய ஞாயிற்றுக் கிழமையே கொள்ளவேண்டும. ஆனால், அந்த ஞாயிறு மாலை 6 மணிக்கு மகர சங்கிராந்தி ஏற்படுகிறது. ஆகவே, அந்தத் திருவாதிரை நாள் குற்றமுடையதாகிறது, எனவே குற்றமற்ற முந்தின திருவாதிரையாகிய மார்கழி மாசம் 2 ஆம திகதி ஞாயிற்றுக் கிழமை இரவு அபிஷேகமும், 3 ஆம திகதி திங்கட்கிழமை உதயம ஆர்த்ரா தரிசனமுமே கொள்ள வேண்டுமென்பது சாஸ்திரசம்மதமாம்

மேலும், மார்கழி மாசம் 2 ஆம திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4½ மணிவரை மிருகசீரிடமும், அதன் பின் திருவாதிரையும் அமைந்து சதுர்த்தசி கூடாமல் பிரதமை திதியாவதாலும், மார்கழி மாசம 2உ ஞாயிற்றுக்கிழமை ஆர்த்ராபிஷேகம செய்வதற்குக் குற்றமற்றது என்பது உறுதியாம்.

திதி பூர்வ பட்சமாக அமைய வேண்டுமென்பதே விதியாகும். நட்சத்திரத்துக்கு அவ்விதி அமையாது ஒரு மாசத்தில் தோஷமற்ற இரு நட்சத்திரங்கள் வருமாயின பிந்திய நட்சத்திரத்தைக் கொள்ள வேண்டுமென்பதே ஆகமநூல் முடிபாகும். அதுவேயன்றித் தோஷமில்லாத முந்திய நட்சத்திரத்தை விட்டுத் தோஷமுள்ள பிந்தியதை

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## நாவலர்

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

பாணத்தில் ஆறுமுக நாவலர் பெருமை மலை விளக்காயிற்று. பெயரளவில திருவாவடுதுறை ஆதீனம் ஆறுமுக நாவலரைத் தந்ததேயாயினும், உண்மையை நோக்குமிடத்துப் பதினொன்கு வருடக் கிறிஸ்த சூழலே நாவலரை நமக்குத் தந்தது ஆபிரிக்க தேசமே காந்தியை மகாத்மா ஆக்கியது பதினொன்கு வருடக் கிறிஸ்த சூழல் வாய்க்காதிருந்தால் ஆறுமுகநாவலர் என்றொருவர் யாழ்ப்பாணத்தில் இல்லை.

[illegible] பயனும்:

ஆறுமுகநாவலர் வித்தியானுபாலன யந்திரசாலை என்ற பெயருடன், மிக அரிதில் உத்தரவு பெற்று அச்சியந்திரந் தாபித்தார். 1849 ம் ஆண்டில் அது தாபிக்கப்பட்டது. நாவலருக்கு வயசு இருபத்தேழு நடக்கின்றது. பாலபாடம், சைவ வினாவிடை, இலக்கண வினாவிடை, ஆத்திசூடியுரை முதலியவைகள் பாலப்பருவத்திலிருந்து அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் ஆனவிலிருந்து எழுதப்பட்டன இலங்கைப் பூமிசாஸ்திரமும் எழுதினார். எழுத எழுத அச்சுவேலை நடந்துகொண்டிருந்தது. பெரியபுராண வசனம் எழுத நேரமின்றி ஏட்டிற் பாட்டைப்பார்த்து அச்சடுக்குவோருக்குப் பக்கத்திலிருந்து சொல்லச் சொல்ல அச்சடுக்கி வெளிவந்தது. ஆவசியக தேவைக்குரிய புத்தகங்களனைத்தும் முப்பது வயசுக்குள் அச்சாயின. [1]ஞானக்கும்மி, சுப்பிரபோதம் என்கின்ற சைவ தூஷண பரிகரிப்புக்களைக் கண்டு பாதிரிகள் ஏங்கினர் முப்பத்திரண்டாம் வயசில் வெளிவந்தது சைவதூஷண பரிகாரம். அது பாதிரிமாரின் வாயை அடைத்தது இங்கிலாந்திலுள்ள கிறிஸ்தவ சபையே அக்கண்டன முறையைப் பெரிதும் மெச்சியது. கிறிஸ்த எதிர்ப்புச் சனி மடிந்தது. பிரபலஸ்தர்கள் பலர் பழையபடி சைவத்துக்கு வந்தனர். பலர் மதமாற்றத்துக்கு நாணினர்.

சிவபூசை ஆதியன:

முப்பத்திரண்டாம் வயசில் விவாகப்பேச் செழுந்தது அதை மறுத்து அவ் வருடத்தில் சிவபூசை எழுந்தருளப் பண்ணிக்கொண்டார். விடிய ஐந்து நாழிகைக்கு முன் எழுந்துவிடுவார். காலைக் கடன்கழிந்தபின் சிவபூசை; மத்தியானம் வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை சபாபதிநாவலர் செந்திநாதையர் போன்றவர்களுக்குப் பாடஞ் சொல்லுதல்; அதன் மேல் நூலுரைகள் செய்தல, பின்பு மாலைக்கடன; இரவிற பழைய நூலுரைகள் பலவாகிய பழைய ஏடுகளிற் பரிசோதனம்; பிரதி செய்தல; செய்வித்தல்; அச்சுத் தாள்களைத் திருத்துதல்; விசேட காலத்திற் சைவப் பிரசங்கஞ் செய்தல; திருவிழாக காலங்களிற் கிறிஸ்தவர்கள் கூட்டங் கூட்டமாக வந்து பிரசாரஞ் செய்வாராதலின், அவர்களை எதிர்த்து வாதஞ் செய்தற்குச் சைவ போதகர்களை அணிவகுத்து விடுத்தல; சைவாலய சீர்திருத்தங்கள் - சைவக் கிரியைகளின் விளக்கங்கள் - சிவதீக்ஷை விசேடங்கள் - சிவாகமச் சிறப்புக்கள் என்னும் இவைபற்றி உரையாற்றல்; என்றிங்ஙனம் பத்து வருடகாலம் மூச்சுவிட நேரமின்றிக காரியங்கள நடந்தன "ஆட்டுவித்தா லாரொருவர் ஆடாதாரே".

(வளரும்)

[1] இது சன்னாகம் முத்துக்குமார கவிராயரியற்றியது.

## ஆதீன ஆண்டுவிழா

நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் ஆண்டுவிழா எதிர்வரும் 27-11-67 மாலை 7-00 மணி தொடக்கம நல்லூர்ச் சிவன்கோயில மண்டபத்தில் இடம்பெறும்.

மாலை 5-00 மணிக்கு ஆதீனத்திலிருந்து ஆலயத்திற்கு வீதி பஜனையுடன் ஊர்வலம் செல்லும. சிறப்புச் சொற்பொழிவாளர்களாக உதவி அரசாங்க அதிபர் T. முருகேசம்பிள்ளை வித்துவான் K. K. நடராசன் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி முதலிய பலர் உரை நிகழ்த்துவா.

நேயர்கள் நெஞ்சம்

# மார்கழித் திருவாதிரை

———0———

இவ்வருட பஞ்சாங்கத்தில் மார்கழித் திருவாதிரையை மார்கழிமாதம் 3"ம் திகதி குறித்திருக்கின்றேம். இதன் விதி காமிகாகமம் முதலிய சாஸ்திரங்களில் கூறப்பட் டிருக்கின்றது. ஒருமாதத்தில் இரண்டு நக்ஷத்திரங்கள் வந்தால் பிந்திய நக்ஷத்திரமே முக்கியமாகக் கொள்ள வேண்டியதென்பது பொதுவிதி. ஆனல், இவ் வருடத்தில் மார்கழிமாதம் 30-ம் திகதி திருவாதிரை 47 நாழிகை 9 விநாடிவரை நிற்கின்றது; தைச்சங் கிராந்தி அன்று 30 நாழிகை 14 விநாடியளவில் நிகழ்கின்றது ஆகவே, இத் திருவாதிரை மார்கழி மாதத்துக்கும் தைமாதத்துக்கும் பங்குபட்ட நக்ஷத்திரமாகுமன்றி மார்கழிமாதத்துக்குமட்டும் உரியதாகாது. இது சங்கிரமதோஷ முடையதாய் இருப்பதால், மார்கழிமாதம் 3-ம் திகதி வரும் திருவாதிரையே சாஸ்திர சம்மதப்படி கொள்ளப்பட வேண்டுமென்பதும் பிந்திய திருவாதிரை சுத்தமான மார்கழித் திருவாதிரை ஆகாதபடியால் அது கொள்ளப்படக் கூடாதென்பதும் தெளிவாகத் தெரிகின்றது.

"மார்கழி மாதந் தன்னில் வருவிநாயக நோன்பிற்குப்
பேருறு பத்தாநாளிற பித்தனு ளுவாவுங்கூடிற்
சீருற சிதம்பரத்திற் றிருநடர் விரதமாகுஞ்
சாருறதயிலா ணித்துச் சனனநோய் தீருவாயே".

என்று சரசோதி மாலையில் தெய்வ விரத படலத்தில் 20-வது செய்யுளில் கூறப்பட்டிருக்கின்றது.

இச் செய்யுளின்படி விநாயக ஷஷ்டி விரதத்திற்குப் பின் பத்தாவது நாளை யடுத்துவரும் திருவாதிரை மார்கழித் திருவாதிரை என அனுட்டிக்கப்படவேண்டியது.

இங்ஙனம்,

சோதிடபரிபாலன மடம், இ. சி. இரகுநாதையர்
கொக்குவில், 20-11-67.

x x x

# திருவாதிரை எப்போது?

———0———

இவ்வாண்டு திருவாதிரை எப்போது? என்ற ஓர் ஐயவினு இந்து சாதனத்திலும் ஏனைய பத்திரிகைகளிலும் எழுப்பப் பட்டிருப்பதை வாசகர்கள் அறிவர். பொதுவாக விரதம் அனுட்டிக்கும் பொதுமக்களும் சைவாலய தர்மகர்த்தாக்களும் பஞ்சாங்கங்களின் துணைக்கொண்டே பல்லாண்டுகளாகத் தம் விரதங்களை அனுட்டித்து வந்துள்ளனர். ஆனல் சென்ற சில ஆண்டுகளாக பஞ்சாங்கங்களின் விரத நிர்ணயத் தடுமாற்றத்தினுல் பக்தர்கள் பெரிதும் இடர்ப்படுகின்றனர், அவ்வப்போதெல்லாம் வேதாகமங்களிலே தேர்ச்சியுள்ள சைவசமயக் குருமார்கள் துண்டுப் பிரசுரம் மூலமாகவும், பத்திரிகைகள் வாயிலாகவும் சந்தேக நிவிர்த்தி செய்து விரதங்களை இனிது அனுட்டிக்க உதவியுள்ளனர் அங்ஙனமே இவ்வாண்டும் சர்ச்சைக்குரிய திருவாதிரை விஷயமாகச் சில கூறுதும்.

யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கம் கார்த்திகை 23 உ பூரட்டாதி நக்ஷத்திரத்தில் திருவெம்பாவைப் பூஜாரம்பம் எனவும், மார்கழி மீ 2 உ (17-12-67) இரவு நடேசர் ஆர்த்திராபிஷேகம் எனவும், 3 உ (18-12-67) உதயம் நடேசர் ஆர்த்திரா தரிசனம்எனவும் குறித்துள்ளது.

கஞ்சனூர் பிலவங்க ஹூ சுத்தவாக்கிய பஞ்சாங்கத்தில் மார்கழி மீ 21 உ மாணிக்கவாசகர் உற்சவ ஆரம்பம் எனவும், 14-1-68 ஞாயிறு காலை ஆர்த்திரா தரிசனம் எனவும் குறிக்கப்பட்டுள்ளது.

ஆனந்தபோதினி சுத்ததிருக்கணித பஞ்சாங்கத்தில் 14-1-68 ஆருத்திராதரிசனம் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

சுதேசமித்திரன் பஞ்சாங்கம் ஆர்க்காடு சர்வ முகூர்த்த பஞ்சாங்கம் என்பனவும் மார்கழி 28-ஆந் திகதியையே குறித்துள்ளன.

திருவெம்பாவை அனுட்டிக்கப்பட வேண்டிய காலம், ஒழுங்கு, முறை என்பனவற்றைப்பற்றி உத்தர காரணுகமம், ஆருத்திரா விரத விதபடலம் மிக விளக்கமாகக் கூறுகின்றது, அவற்றைத் "திருவாதிரை மாண்பு" என்னும் வெளியீடு பார்க்க.

சுருக்கம்: திருவெம்பாவை ஒரு சக்திஉற்சவம், அதற்குச் சிவ நக்ஷத்திரமே பிரதானம், மார்கழி மாதத்து வளர்பிறைச் சதய நக்ஷத்திரம் முதல் திருவாதிரையீருகப் பத்து இரவுகள் (பின்னிரவு) அனுட்டிக்கப்பட வேண்டும். உற்சவம் முழுவதும் விடிவதற்கு முன் முடிவடைய வேண்டும். விடிந்ததன்பின் திருவுலாத்தானும் செய்தல் பிழை.

திருவாதிரை இரண்டு வரின் பிந்தியதே கொள்ளப்பட வேண்டும். இரண்டு ஆதிரைகளும் பூரணையோடு வரினும் பிந்தியதே நோன்புக்குரியது

ஆதலின் எப்படிப் பார்த்தாலும் பின்னையதே கொள்ளப்பட வேண்டியது.

"முன்னைய நக்ஷத்திரத்தில் செய்தால் எஜமானனுக்குக் கேடுண்டாம். பிந்தியதிற் செய்து பயன் பெறுக." திரயோதசியோடும் சதுர்த்தசியோடும் கூடியதாய்த் திருவாதிரை வருமாயின் அது தோஷமுடைத்து. அங்ஙனமாயினும் அத் திருவாதிரையைச் சாந்திபூர்வமாய் அனுட்டிக்குக. என்ற வசனத்தினுலே இரண்டாவது திருவாதிரையையே சாந்திபூர்வமாக அனுட்டிப்பதே சாஸ்திர சம்மதம்.

மேலும் காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகளும பிந்திய திருவாதிரையிலேயே விரதம் கொள்ளும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார். சென்றவாரம இந்தியா சென்று திரும்பிய நகுலேசுவர ஆலயக் குலங்கிழார் அவர்களும் சிதம்பரம் முதலிய பிரபல தேவஸ்தானங்கள்யாவும் 14-1-68 ல் தான் தரிசனம் செய்கிருர்கள் என அறிந்து வந்துள்ளார். ஈழத்துச் சிதம்பரம் முதலியனவும் அங்ஙனமே கொள்கிருர்கள். ஆதலின் ஏனைய குலங்கிழார்களும் ஏற்ற பெற்றி நோன்பியற்றி நற்கதி பெறுவாராக. சுபம்.

கு. பாலசுந்தரக் குருக்கள்
மாவை, தெல்லிப்பழை.

## அண்ணாமலை தீபம்

பிலவங்கஹூ கார்த்திகைமீ 28 உ (14-12-67) வியாழக்கிழமை திருவண்ணாமலை ஸ்ரீ அருணாசலேசுவரர் ஆலயத்தல் கார்த்திகைத்தீபம் நடைபெறும்.

## திருவாதிரைத்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கவேண்டும் என்பதுஆகம சாஸ்திர சம்மதமாகாது.

இன்னும், திருவாதிரை நட்சத்திரம் சங்கிராந்தியுடன் சேருமாயின் மூந்தின நட்சத்திரத்தையே கொள்ள வேண்டும். சங்கிராந்தி தோஷமிருந்தால் அன்றைய தினம் ஒருபோதும் அபிஷேகம் பூஜை முதலியன செய்யலாகாது. அப்படிச் செய்தால் செய்பவனும் செய்விப்பவனும் துன்பம அடைவர், அபுத்தி பூர்வமாகச் செய்ய நேர்ந்து விட்டால் சம்புரோட்சன அபிஷேகம் செய்யவேண்டும். இது காமிகாகமம் கிரியாபாதம, மண்டபார்ச்சனை விதி 45 ஆம் படலம் 135 ஆவது சுலோகத்தில் காணப்படுகிறது. அது வருமாறு:

"ஸாங்தே லங்க்ரமனம் ப்ராப்தே
பூர்வ ருட்சே(அ)பி அபிஷேசனம்
கர்த்தா போக்தா விநச்யேத
தத்தோஷ சமனார்த்தகம்
சநபநோகத விதாநேந ஜல
கம்ப்ரோட்சனம் குரு."

என்பது.

ஆகவே, இதனுலும் இந்த வருடம் மார்கழி மாசம 2 ஆந்திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு நடராஜ அபிஷேகமும் அடுத்து வரும் சூரியோதயத்தில் தரிசனமும கொள்ள வேண்டுமென்பது நிச்சயமாகிறது.

ஆர்த்திரா தரிசனத்துக்கு மூலஸ்தானமாக மதிக்கப்படும் சிதம்பரத்திலே இந்த வருடம் மார்கழி மாசம் 29 சனிக்கிழமை இரவு அபிஷேகமும் அடுத்து ஞாயிறு காலை தரிசனமும் கொள்வதற்கு இந்தத் தோஷங்கள் அமையமாட்டாவா? என்ற ஐயம் நிகழலாம். அங்கு அப்படிச் செய்வதற்கும் விதி காமிகாகமத்தில் இருக்கிறது.

நிருத்தமூர்த்திக்குக் கொடியேற்றி விழாநடைபெறும் இடங்களில் பிந்திய மூக்கூட்டுக் குற்றம், சங்கிராந்திக் குற்றம் முதலியன தோஷமாகாது சிதம்பரத்தில் கொடியேற்று விழா நடைபெறுவதனுல் அங்கு அது குற்றமல்ல. அப்படியல்லாது அபிஷேகம் நடைபெறும் இடங்களில் குற்றமில்லாத நாளையே கைக்கொள்ள வேண்டும். விதி வருமாறு:

"தவஜாரோகம் க்ருதேயத்து
ந்ருத்த மூர்த்தே விசேஷத:
தசவாரம் க்ரமாச்சைவ
அபிஷேகம் நதோஷகம்."

என்பது.

க. வை. ஆத்மநாத சர்மா,
யாழ்ப்பாணம்.
20-11-67.

# திருஅருணுசலக் கார்த்திகை விளக்கீடு

[யாழ்ப்பாணம் மேலைப் புலோலி ஸ்ரீமத் நா. கதிரவேற்பிள்ளையவர்கள் ஆற்றிய உபந்நியாசம். "சைவம்" என்னும் சஞ்சிகையில் முற்காலத்தில் பிரசுரமானது )

முற்தொடர்-3

சோதியுருவாக முதலிற்றேன்றியது மாசிச் சிவராத்திரியிலேயே. இலிங்கோற்பவ மூர்த்தியாய்ப் பின்னர்க் காட்சி கொடுத்தது மகாநிசிக் காலமாகிய இரவு இருபத்தேழு நாழிகைக்குள்ளாம். அக்காலந் தேவ நாளாதலின் அக்கணக்கின்படி பார்க்கின் மானுடதினக் கார்த்திகை மாதமே தேவர்க்கு மகாநிசிக் காலமாகும். அதுபற்றியே கார்த்திகையில் விளக்கு விழாச் செய்யப்படுமென்றறிக. இதுவன்றி, வரன் என்னுமொரு சித்தன், முனிவர் சாபத்தால் மகிடாசுரனுய்ப் பிறந்திருக்க, சங்கரி அவனைக் கொன்று அவன் கழுத்திற் சிவலிங்கந் தோன்றியெடுக்க, அது கையினின்றும் நீங்காதுறைய, அப்பாவத்தை விலக்கிக் கொள்ளற்காக, அம்மையார் இத் திருவருணுசலத்தையடைந்து ஐப்பசி மாதத்துக் கேட்டை நட்சத்திரத்திற் பூசித்துக் கட்க தீர்த்தத்தில் முழுகி யருச்சித்த மையாற் சிவலிங்கம் கையினின்றும் நீங்கப்பெற்றனர். கார்த்திகைக் கார்த்திகையிலே சிவாகம விதிப்படி யுற்சவம் நடத்துவித்துத் திபங்களையு மெவ்விடத்தும் ஏற்றுவித்துத்தாம நினைந்தனவெல்லாம் பெற்ருர் என்று அருணகிரி புராணம் கூறுதலால், அவ் விதிப்படியிக்காலத்துந் தீபமேற்றுகலுமாம். இத் தீப தரிசனஞ் செய்தோர் சிவபெருமானைத் தரிசித்தவராவர். சிவபெருமான் ஒளி வடிவாயிருக்கின்ருர் என்பது தோன்றத் திருநெறித் தமிழ் வேதமும் "சோதியே சுடரே சூழொளி விளக்கே" என்று கோஷிக்கின்றது; இம் மலை சிவனேயாதலால் இதன் கண் கால் வைத் தேறுதல் மகா பாதகமாம். இம்மலையை வலம் வந்தோர் தம் பாவங்களெல்லாம் நீங்கி முத்தி பெறுவர். வலம் வருவோர் பாதரட்சை, தொடுதோல் இட்டும், குடை பிடித்தும், வாகனத்தேறியும் செல்லலாகாது முன்னர் மாகிதன் என்னும் அரசன் குதிரையிலேறி வலஞ்செய்தான். அதனுல் அவன் நரகத்தில் வீழ்ந்தான். குதிரை சிவலோகஞ் சென்று சிவகணத் தலைவனுய் வாழ்ந்ததென்று உண்மை நூல்கள் கூறின. ஆதலால் நமரங்காள்! குளிக்கப்போய்ச் சேறு பூசுவார் போலப் பாவந் தேடிக்கொள்ளாது விதிப்படி தீப தரிசனமும், பிரதக்ஷிணமும் செய்து பேரின்பு உறுவீராக. (வளரும்)

# திருவாதவூரடிகள் வரலாறு

## ( ஹாலாஸ்ய மான்மியத்தின் வண்ணம் )

— பிரம்மஸ்ரீ K. சுப்பிரமணியஐயர் —

(முற்றெடர் — 9)

101. அவைகளைப் பார்த்தால் அவைகளின் எழுச்சி எங்கும் பரவியதாகக் காணப்படும் பெயரளவில் பாண்டிய மன்னன் என்றிருக்கும் நீங்கள் (குதிரைகளுக்குத் தலைவன்) அஸ்வபதி என்னும பெயரைப் பெறுவீர்கள். இதில் சந்தேகமில்லை என்று என்னுல் கூறப்பட்டுள்ளது.

102. இவ்விதம் மந்திரியார் கூறியவுடன் அவனிடம் மகிழ்ச்சியுற்ற மன்னன் சிறந்த ஆபரணங்களாலும் வஸ்திரங்களாலும்இன்மொழிகளாலும் அவரைக்கௌரவித்துவிட்டு

103. மன்னன் அவனையன்போடு வீட்டிற்குச் சென்று வாரும் என்றுஅவருக்கு அனுமதியளித்தருளினன்.

104. அவரும்அழகிய அரசமாளிகையிலிருந்துவிரைவில் புறப்பட்டு பொற்ருமரையை அடைந்து ஸ்நானம செய்து அனுட்டானங்களை முடித்துவிட்டு.

105. விபூதி உருத்திராக்ஷம் இவைகளாலுடம்பை குளக்கரையிலிருக்கும் விஞ அலங்கரித்துக்கொண்டு அக்

( தொடர்ச்சி 4-ம் பக்கம் )

## பிரிவிடுதல் நொத்தீசு

இல. P / 1067 முற்பதிவு யாழ்ப்பாணம்.
K 247
26 A.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

புத்தூர் கிழக்கு சரவணமுத்து கந்தையா —வழக்காளி

எதிராக

1. புத்தூர் கிழக்கு பொன்னையா சிவசுப்பிரமணியம்
2. புத்தூர் மேற்கு அம்பலவாணர் இராசதுரை
3. ஷையூர் காசிநாதர் கந்தையா
4. ஆவரங்கால் நீலன் வயிரமுத்தன்
5. புத்தூர் கிழக்கு எம், சண்முகசுந்தரம்
6. ஷையூர் சுகதேவி சிவசுப்பிரமணியம்
7. ஷையூர் முத்துக்குமாரு மகன் போகதேவி —எதிரிகள்

வடமாகாணத்துப் பிஸ்கால் துரையவர்கட்கு வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி புத்தூர்க் கோயிற்பற்று புத்தூர் கிழக்கு இறை நீ பரப்பு பயதிதங்கலட்டி நீ பரப்பு 52 இறை என்னும் ஆதனம் 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டின் மேற்படி இலக்கத்தின் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடரப்பட்டிருக்கின்றதென்று இத்தாலுமக்கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1967-ம் ஆடி மீ 1-ந் தேதி 10-00 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிருர்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி
Kanapathipillai
பிரதமலிகிதர்.

1967-ம் ஆ சித்திரை மீ 4 த உ

எம். 320, 24-11— )

## திருவாதவூரடிகள் வரலாறு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யகப்பெருமானையும் ஷண்முகரையும் துதித்துவிட்டு.

106. தன் எண்ணம் நிறைவேறுவதற்காகச் சுந்தரேசன் நாயகியாகிய அழகிய மீனுக்ஷியை அடைந்து வணங்கி விட்டு.

107. ஹாலாஸ்ய ஈஸ்வரரான எல்லாவற்றையும் உணர்ந்த எல்லோருடைய விருப்பத்தையும் பூர்த்திசெய்கின்றவரான ஈஸ்வரனை பக்தியுடன் பன்முறை வணங்கி விட்டு.

108. தன்விருப்பம் நிறைவேறவேண்டுமென்று அம் மந்திரியானவர் பக்தியுடன் தெரிவித்துக்கொண்டார்.

109. தெரிவித்துக்கொண்ட முடிவிலே ஈசனிடமிருந்து அசரீரி வாக்குத்தோன்றியது "கொஞ்சமும் மனவருத்தப் படவேண்டாம்'' என்று அழகிய குரல் தோன்றியது.

(தொடரும்)

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அச்சுவேலி கந்தையா சின்னப்பரின் சொத்தின் பராமரிப்பாளராக அச்சுவேலி வடக்கு நாகப்பர் கிருஷ்ணர் —வழக்காளி

வழக்கு இல, M. B. 8394 எதிராக

கதிரிப்பாய், அச்சுவேலி 1. முருகுப்பிள்ளை தில்லையம்பலமும் பெண் 2. சின்னத்தங்கச்சி —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 8394-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1967-ம்ஞு மார்கழிமீ 18-ந் உ திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 5025-ம் 16-8-66 தொடக்கம் 25-2-67 வரைக்கும் ரூபா 3,000 க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 317-20.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு அச்சுவேலி கோயிற்பற்று கதிரிப்பாய் இறை 'உயரவத்தை' பரப்பு இலா 18 குளி 11. இதில் மத்தியில் பரப்பு இலா 2, குளி 11 வான் பயிர் செய் பயிர்களும், கிணறு கல் வீடு இதற்கு எல்லை கிழக்கு கயிலாயபிள்ளை பெண் அன்னம்மாவின் ஆதனம். வடக்கு செல்லையா பெண் இராசம்மாவின் ஆதனம், மேற்கும் தெற்கும் ஒழுங்கை. இதடங்கலும், பதிவு இல. K 210/26.

22, பெருமாள்கோவில் தெற்கு- ஒழுங்கை. யாழ்ப்பாணம், 28-10-67.

நா. ஸ்ரீஇரங்கநாதன்
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்.
எம். 316 24—11—67

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. சின்னத்தம்பி கார்த்திகேசு முருகேசுவும் பெண்
2. பாறுபதியும் - பளுகாடு காரைநகர் மேற்கு —வழக்காளி

இல. M B. 6766 எதிராக

1. கந்தையாபிள்ளை யெகதீசன் பளுகாடு காரைநகர் மேற்கு — எதிராளி.

1. கந்தையா தம்பிராசாவும் பெண்
2. அம்பிகையும் — காரைநகர் மேற்கு — வெளிக்காட்டப்பட்ட எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 6766-ம இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும 1 துண்டுக காணியை 1967-ம் ஞு மார்கழி மீ 20-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் அந்தக காணிகுள் நின்று பிரசித்த ஏலததில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா: 4300-ம் 29-6-64 தொடக்கம் 4-5-65 வரைககும் ரூபா 3000 க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 274-95,

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு இறை "ஆலப்பதையக் கலட்டி'' ஆட்சியின்படி கி. பர 4-ம் குளி $6\frac{3}{4}$ ம செய்பயிர் வான் பயிர்களும் வீடும் கிணறும் எல்லை கிழக்கு கந்தையா சுப்பிரமணியத்தின் ஆதனம். வடக்கு கந்தர் சிவகுருவின் ஆதனம். மேற்கு தெரு, தெற்கு கதிரவேலு முருகேசுவின் ஆதனம். இவையடங்கலும. பதிவு C 321/118.

நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறை. 23-10-67.

யு. அ. எட்வேட்,
கொமிஷனர் & விலைமதிப்பாளர்.
M 314 24-11-67.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

காரைநகர்மேற்கு கணபதிப்பிள்ளை முருகப்பா மகள் தங்கரத்தினம் — வழக்காளி.

வழக்கு இல. M B. 8388

எதிராக

பெரியவிளான் 1. செல்லர் கதிரவேலுப்பிள்ளை 2. கதிரவேலுப்பிள்ளை பெண் விசாலாட்சி காரைநகர் மேற்கு 3. சிவகுரு நவரத்தனம்

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 8388-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக காணி 1967-ம் ஞு மார்கழிமீ 23 ம் திகதி (23-12-67) சனிக்கிழமை முற்பகல் 10-30 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 1090ம் 14-8-66 தொடக்கம் 21-2-67 வரைக்கும் ரூபா 1000-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் முற்ருக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும்கோட்டுச்செலவு ரூபா 265-26 சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம மேற்குப் பகுதி பண்டத்தரிப்பு கோயிற்பற்று, பெரியவிளான் இறை "முகுந்தன் சீமாவும் குப்பையாண்டிசீமாவும்'' கிலப்பரப்பு 2, 7/8 செய்பயிர் வான் பயிர்களும் வீடுகளும். எல்லை கிழக்கு செல்லப்பா பெண் செல்லம்மாவின் ஆதனம். வடக்கு இளையதம்பி தபுவின் ஆதனம். மேற்கு இளையதம்பி வைரமுத்துவுக்கும் பெண் இராசம்மாவிற்குமுரிய ஆதனம். தெற்கு தம்பையா காசிப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் பஸ்தியாம்பிள்ளை ஞானப்பிரகாசததுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலும். அத்துடன் வடகெல்லைக காணியின் மேற்கெல்லைப் பக்கமாக இக்காணிக்குப்போகும் ஆறு முழ அகலப்பாதைப்பாவிப்புரிமையும், தென்மேற்குப் பகத்திலுள்ள தூர்வை விலத்திலுள்ள கிணற்றில் பங்கும் வழமையான வழி வாய்க்கால் உரிமையும்.

செ. பாண்டித்துரை
Commissioner of Sales, Valuer
கொம்மிஷனர், விலை மதிப்பாளர்
உத்தரவுபெற்ற ஏலதாரர்
மல்லாகம், 11-11-67
எம், 318, 24-11— )

---

## கோட்டு விற்பனவுவிளம்பரம

சிவசம்பு கைம்பெண் சொர்ணலட்சுமி சுதுமலை, வடக்கு —வழக்காளி

இல. M B 5571 எதிராக

1. காலமசென்ற, வயித்தி பொன்னன்
2. வயித்தி பொன்னன் கைம்பெண் சின்னப்பிள்ளை
3. தமியார் கணபதிப்பிள்ளை, தன்னை (யாமச் சந்திக்கு இட்ட உடுவில்)
4. பொன்னன் அருமைத்துரை, தன்னை (காலம் சென்ற முதலாம் எதிரியின் ஆதனத்தின் சட்டரீதியான பராபரிப்புக்காரன்.

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 5571-ஆம் இலக்கவழக்கில் எனக்குக்கிடைதத கோட்டுக் கட்டளைப்படி, பின்னால்விபரிக்கப்படும் துண்டுக் காணிகள் 1967-ம் ஞு (8-12-67) டிசம்பர் மீ 8-ந் உ வெளளிக கிழமை முற் பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசிதத ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 5571-14 சதம் 22-4-63 தொடக்கம் 12-9-63 வரைக்கும் ரூபாய் 4000/- க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 309-27½ சதம் கோட்டுச் செலவு கொடுபட்டது. இன்னும் ரூபாய் 4000 தீர்வைத தொகையால் 3-7-67 ல் கோட்டில் கட்டப்பட்டது முத்திரைச் செலவு ரூபா 24 கட்டட.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திக் வலிகாமம் வடக்கு உடுவில் கோயிற்பற்று உடுவில் இறை ஈச்சந்தை பரப்பு நிலலாச்சம் 4-ம் (நாலும்) எல்லை கிழக்கு மருதன் கணவதியின் ஆதனம் வடக்கு வீரகத்தி கதிரவேலனின் உரிமைக்காரரின் ஆதனம், மேற்கு கணவதி பெண் சிதம்பரத்தின் ஆதனம், தெற்கு குட்டியன் சின்னத்தம்பிக்கும் சபாபதிப்பிள்ளை கார்த்திகேசுவின ஆதனங்களும் கைபொழுங்கை முகப்பும் இவ்வெல்லைக் குட்பட்டவை. கிழக்குப்பக்கமாக இருக்கும் இரண்டு முழ அகல ஒழுங்கையில் பாவிப்பு உருத்தும் புறநீங்கலாக முழுவதும். இக் காணிக்கு வடமேற்கேயும் என்றும் அருகே உள்ள காணிகளுக்கு கிட்ட இருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும்.

2. மேற்படி இறை ஈச்சந்தை பரப்பு நில லாச்சம் 7 ம் இதில் வடக்குப்புறமாக பரப்பு நில லாச்சம் 3½ எல்லை கிழக்கு கந்தையா பெண் செல்லம்மாக்குரிய ஆதனம், வடக்கு கதிரன் தேவனுக்குரிய ஆதனம், மேற்கு மாதன் கந்தையாவிற்கும் கந்தையா பெண் பறுபதத்திற்கும் உரிய ஆதனம். தெற்கு கந்தையா பெண் பறுபதத்துக்கு உரிய ஆதனம் இது முழுவதும் கந்தையா பெண் பறுபதத்தின் காணிக்குள் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழி வாய்க்கால் பாவிப்பு உருத்தும் தூர்வை உருத்தும்

விதானை வளவு சித்தங்கேணி, 10-10-67.

சி. செ. மாரிமுத்து,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
M 317, 24—11—67.

---

## Commission Sale

## கோட்டுக்கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இலக்கம் 8822.

பொலிகண்டி, கந்தையா வடிவேலு —வழக்காளி

எதிராக

கரணவாய் தெற்கு கந்தர செல்லத்துரை —எதிரி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக்கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம் 1967 ம ஆ மார்கழி மீ 15 ந உ வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் குறித்த காணியிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று கரணவாய் இலகாமக் குருச்சியிறை தலுக்கட்டைபொக்கை நிலப்பரப்பு 30½ எல்லை கிழக்கு செல்லையா கைம்பெண் செல்லாச்சலாசிக்குடைய வாதனம், வடக்கு கட்டையா தாமுவுக்கும் மனுபேருக்குமுடைய வாதனம், மேற்கு சின்னத் தம்பி தம்பிப்பிள்ளைக்கும் மனுபேருக்குமுடைய வாதனம், தெற்கு மெல்லியர் இராமலிங்கத்துக்கும் மனுபேருக்குமுடைய வாதனம் இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலிகளடங்கலிற் சொரியலாய் 73/438 பங்கும்.

| | | |
|---|---|---|
| தீர்ட்சித் தொகை | ரூபா | 1855 00 |
| இதில் ரூபா 1000 க்கு 27-9-65 தொடக்கம் 10-1-66 வரை 12 வீத வட்டி | ரூபா | 35 00 |
| ரூபா 1890 க்கு 10-1-66 தொடக்கம் 4-10-67 வரை 5 வீத வட்டி | ரூபா | 164 00 |
| | | 2054 00 |
| | செலவு | 211 87½ |
| | மொத்தம் | 2265 87½ |

வல்வெட்டித்துறை, 9-11-67
M 375. 24-11-67.

V M. KANDASAMY,
Commissioner of Sale & Valure

---

## பிரிவிடுதல் நொத்தீஸ்

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டில்

வல்லுவெட்டித்துறை வீரகதி செல்வராசா —வழக்காளி

இல: 965 / P எதிராக

மயிலிட்டி 1. கணபதி சுப்பர், 2. கணபதி சின்னட்டி, 3. சின்னவி வயிரவி, 4. பெண் செல்லாச்சி, 5. சின்னர் சதாசிவம், 6. பெண் சின்னத்தங்கம், 7, வேலு இராசா, 8. சின்னட்டி இளையதம்பி, 9. பேதுரு தியோகுப்பிள்ளை கைம்பெண் மரியபிள்ளை, 10 வல்லுவெட்டித்துறை சிவகுரு துரைசாமி, 11 V. சுந்தரராசா கைம்பெண் ஸ்ரீரங்கநாயகி தற்காலம் தொண்டைமனூர், 12. மயிலிட்டி மூத்தர் நடுவிலர், 13. பெண் சிகைஞ்சி, 14. நடுவிலர் பொன்னையா, 15 சின்னட்டி சின்னத்துரை, 16. சின்னட்டி மார்க்கண்டு, 17. சின்னர் இராசா, 18. சிதம்பரி வேலுப்பிள்ளை, 19 சிதம்பரி கணபதிப்பிள்ளை, 20 V.S. இளையதம்பி —எதிராளிகள்.

மேற்சொல்லிய எதிரிகளுக்கு வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு மயிலிட்டி கோவிற்பற்று பனாவி இறை நளவந்தபுலம நில 42. என்னும் ஆதனம் அல்லது ஆதனங்களை 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக் கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1967-ம் ஞு கார்த்திகை மீ 25-ம் உ 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி,
ஒப்பம்

1967-ம் ஞு புரட்டாதி மீ 9 ம் உ. பிரதம லிகிதர் / சக்கிடுத்தார்.
எம். 313. 24-11-67

---


யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாப நிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 7 விகிதமும் 9 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை J. P.
சிறுப்பர்.

Std. 14


குழவி வெண் பிறை மிலைச்சி யோற் குனித்த மாதவத்தின்
இழை தடம்புன லருவி தாழிமைய மீன்றளித்த
மழை மதர்த்த கண்மரகதப் பசும்பிடி பயந்த
தழை மடற் செவித் தந்தி பொற் சரணமே சரணம்.

---


யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், பிரம்மஸ்ரீ க. செ. பாலசுப்பிரமணியஐயர் புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம் அவர்களால், 24—11—1967 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.